முழுப்பதிப்புரிமையுடையது

இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

# AA3 பரீட்சை – 2015 யூலை

# (AA33) வியாபார முகாமைத்துவமும் தந்திரோபாயமும்

(Business Management and Strategy)

2015-08-02
பிற்பகல்
[2.00 – 5.00]

பக்கங்கள் : 06
வினாக்கள் : 10

- ***பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்*** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***நேரம் :*** *03 மணித்தியாலம்*

(2) ***வினாத்தாள் கட்டமைப்பும் புள்ளிகள் ஒதுக்கீடும்:***

| பகுதி | தேவைப்பாடு | புள்ளிகள் |
|---|---|---|
| A | சகல வினாக்களுக்கும் விடை எழுதுக. | 20 |
| B | சகல வினாக்களுக்கும் விடை எழுதுக. | 30 |
| C | மூன்று வினாக்களில் இரண்டிற்கு மட்டும் விடை எழுதுதல் வேண்டும். | 50 |
| **மொத்தப் புள்ளிகள்** | | **100** |

(3) *பரீட்சைக்கு* ***விண்ணப்பித்த*** *அதே ஒரு ஊடக* ***மொழியிலேயே*** *தரப்பட்ட விடைப் புத்தகத்தில் விடைகள் எழுதப்பட வேண்டும்.*

(4) *எடுகோள்கள் ஏதேனும் உங்களால் எடுக்கப்பட்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுக.*

(5) ***வரைவிலக்கணத்துடனான*** *செயல் வினைச்சொல் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டிருக்கிறது. பட்டியலில் தரப்பட்டுள்ள வினைச்சொல்லின் வரைவிலக்கணத்தை அடிப்படையாக வைத்து பரீட்சார்த்திகள் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.*

---

## பகுதி A

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா இல. 01

“உற்பத்தித்திறன் (Productivity), வினைத்திறன் (Efficiency), விளைதிறன் (Effectiveness) ஆகியன முகாமைத்துவத்தின் முக்கிய மூன்று (03) எண்ணக்கருக்களாகும். இவ்வெண்ணக்கருக்கள் ஒவ்வொன்றும் ஒன்றுடனொன்று இடைத்தொடர்புடையனவாக (inter-related) உள்ளன”.

மேற்கூறிய மூன்று (03) எண்ணக்கருக்களின் தொடர்பினை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

### வினா இல. 02

“போதுமான உற்பத்தி வினைத்திறனையும் வேலைத்தள ஒத்திசைவையும் (work place hormony) அடைவதற்காக முகாமைத்துவத்திற்கான பாரம்பரிய அணுகுமுறையோடு (Classical Approach) இணைந்துள்ள பிரச்சினைகளை அகற்றுவதற்கு நடத்தைசார் அணுகுமுறையானது முகாமைத்துவத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இருந்தபோதிலும் நடத்தைசார் அணுகுமுறை (Behavioural Approach) குறித்தும் விமர்சனங்கள் காணப்பட்டன”.

முகாமைத்துவத்திற்கான நடத்தைசார் அணுகுமுறை குறித்தான விமர்சனங்கள் மூன்றினை (03) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா இல. 03

“ஒரு நிறுவனத்தினது அல்லது நிறுவனத்தினுள் காணப்படும் ஏதேனும் குழுவினது வெற்றியானது, அதன் தலைமைத்துவத்தின் விளைதிறனிலேயே அதிகளவில் தங்கியிருக்கின்றமை அடையாளம் காணப்பட்டுள்ளது. குணாம்சம் (trait), நடத்தை சார்ந்தவை (behavioural) மற்றும் சூழ்நிலை சார்ந்தவை (Situational) என்னும் மூன்று கோட்பாடுகளே தலைமைத்துவத்தின் பிரதான கோட்பாடுகளாகும்.”

நிறுவனம்சார் பெறுபேறுகளை அடைவதில் சவால்மிக்க வியாபாரச் சூழ்நிலைகளில் தலைமைத்துவத்தின் குணாம்சக் கோட்பாட்டை (Trait Theory) எவ்வாறு பிரயோகிக்க முடியும் என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா இல. 04

“ஒரு நிறுவனத்தின் கொள்பணிகள் (task) எல்லாவற்றையும் உயரதிகாரிகளில் எவருமே தனிப்பட்ட முறையில் நிறைவேற்றிட அல்லது முழுமையாக மேற்பார்வை செய்திட முடியாதிருக்கும்போது எந்தவொரு நிறுவனத்தினதும் வினைத்திறனான தொழிற்பாட்டிற்கு, உயரதிகாரிகளால் கீழ்மட்ட உத்தியோகத்தர்களுக்கு அதிகாரக் கையளிப்பைக் (delegation of authority) செய்ய வேண்டியது அவசியமாகும்.”

ஒரு நிறுவனத்திற்கான அதிகாரக் கையளிப்பின் அவசியத்தை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி A முடிந்தது*

# <u>பகுதி B</u>

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா இல. 05

“நிறுவனமொன்றின் குறிக்கோள்களை இனங்காண்பதும் அத்தகைய குறிக்கோள்களை அடைவதற்குரிய பிரத்தியேகமான தந்திரோபாயங்களை வடிவமைத்துக் கண்காணிக்கின்றதுமான செயன்முறையே திட்டமிடலாகும்.”

விளைதிறன்மிக்க திட்டமிடலை நோக்கிய தடைகளையும் அத்தகைய தடைகளை வென்றெடுக்கக் கூடிய தந்திரோபாயங்களையும் **விபரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா இல. 06

“தமது அதிகார மட்டம் எதுவாக இருப்பினும் எந்த ஒரு முகாமையாளராலும் தொடர்பாடல் திறன்கள் விருத்தி செய்துகொள்ளப்படல் வேண்டும். விசேடமாக நவீன சுற்றாடலில் தொடர்பாடல் திறனானது, எந்த ஒரு முகாமையாளரும் கொண்டிருக்க வேண்டிய முதன்மைத் திறனாக மாறியுள்ளது. சிறந்த தொடர்பாடல் திறன்களைக் கொண்ட முகாமையாளர்களே நிறுவனத்தினுள் தமது வகிபாகங்களை ஆற்றுவதில் மிகவும் வெற்றிபெற்றவர்களாக விளங்குகின்றனர்”.

முகாமையாளர்களால் விருத்தி செய்துகொள்ளப்பட வேண்டிய தொடர்பாடல் திறன்களின் வகைகள் நான்கினை (04) **விபரிக்குக.** இத்தகைய தொடர்பாடல் திறன்களை முகாமையாளர்கள் எவ்வாறு விருத்தி செய்துகொள்ள முடியுமென்பதையும் **கூறுக.** (10 புள்ளிகள்)

## வினா இல. 07

"ஒரு கட்டுப்பாட்டு முறைமை (system control) இல்லாத சகல முயற்சிகளும் தோல்வியைத் தழுவலாம் என்பதால் கட்டுப்பாடானது, நிறுவனமொன்றின் விளைதிறன்மிக்க முகாமைத்துவத்தின் ஒரு அத்தியாவசியப் பகுதியாக உள்ளது."

கட்டுப்பாட்டுச் செயன்முறையில் சம்பந்தப்பட்டுள்ள படிமுறை ஒழுங்கினை (sequential steps) **விபரிக்குக**. உங்களது விளக்கமானது, பொருத்தமானதொரு வரைபடத்தின் துணையோடு அமைதல் வேண்டும். (10 புள்ளிகள்)

*பகுதி B முடிந்தது*

# பகுதி C

ஏதாவது இரண்டு (02) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா இல. 08

**வரையறுக்கப்பட்ட ABC கம்பனி** ஒரு உற்பத்திக் (தயாரிப்புக்) கம்பனியாகும். **வரையறுக்கப்பட்ட ABC கம்பனியின்** ஊழியர்கள் தமது தொழில்நுட்பத் திறன்கள், நடைமுறை நிபுணத்துவம் (current expertise) மற்றும் கம்பனிக்கு வெளியேயான தொழில்வாண்மைத் தொடர்புகள் ஆகியவற்றின் மீது தமக்குள்ளே கர்வம் கொண்டிருந்தனர். தமது ஊழியர்கள் கடின உழைப்பும் நம்பகத்தன்மையும் கொண்டவர்கள் என அதன் முகாமைத்துவம் நம்புவதால் **வரையறுக்கப்பட்ட ABC கம்பனி** ஒரு சில விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் மட்டுமே கொண்டிருப்பதுடன் மேற்பார்வையையும் தளர்த்தியிருக்கிறது. முகாமைத்துவமானது, உயர் உற்பத்தித் திறனில் (high productivity) அக்கறை கொண்டிருக்கிறது. எனவே, தனது மனித வளங்களைச் (people) சிறந்த முறையில் நடத்துவதன் மூலம் மட்டுமே உயர் உற்பத்தித்திறனை அடைந்துகொள்ள முடியுமென அவர்கள் நம்புகின்றனர். வேலை செய்யச் சிறந்த இடம் என்னும் தனது கீர்த்தி மீது கம்பனி பெருமை கொள்கிறது.

**வரையறுக்கப்பட்ட ABC கம்பனியின்** தொழில் நடவடிக்கைகள் (Job activities), வேலை அணிகளைச் சுற்றி வடிவமைக்கப்பட்டிருக்கும் அதே நேரம் அணி உறுப்பினர்கள், தொழிற்பாடுகள் மற்றும் அதிகார மட்டங்களூடாக ஒவ்வொருவருக்குமிடையிலான இடைத் தொடர்புகளைப் பேண ஊக்குவிக்கப்படுகின்றனர். முகாமையாளர்கள் பற்றிய மதிப்பீடானது அவர்களது திணைக்களச் செயலாற்றுகையின் மீது மட்டுமன்றி, கம்பனியின் ஏனைய திணைக்களங்களுடன் அவர்களது திணைக்களம் தனது நடவடிக்கைகளை எவ்வளவு சிறப்பாக ஒருங்கிணைக்கிறது (Coordinates) என்பது மீதும் மேற்கொள்ளப்படுகின்றது. வித்தியாசமான கருத்துக்கள், வழமைக்கு மாறான தனிநபர் நடத்தை அல்லது சம்பிரதாயமற்ற வேலைப் பழக்க வழக்கங்களைக் கொண்டுள்ள ஊழியர்கள் கம்பனிக்குப் பாரியளவில் பங்களிப்புச் செய்வார்களாயின் அத்தகைய ஊழியர்களுக்கு பதவியுயர்வுகளும் வேறு பெறுமதிமிக்க வெகுமதிகளும் வழங்கப்படுகின்றன. கம்பனியானது, உயர் மட்டப் பதவிகளை கிடைக்கின்ற சிறந்த ஆட்களைக் கொண்டு நிரப்புவதுடன், சிலவேளைகளில் போட்டி நிறுவனங்களிலிருந்தும் ஊழியர்களை வாடகைக்கு (hiring) அமர்த்துகிறது. தனது வாடிக்கையாளர்களின் மாறுகின்ற தேவைகளுக்கு உடன் பிரதிபலிப்பைக் காட்டி, சந்தையை நடாத்திச் செல்வது தொடர்பில் கம்பனி பெருமை கொள்கின்றது. **வரையறுக்கப்பட்ட ABC கம்பனியானது,** அதன் ஊழியர்களை முகாமை செய்கின்ற வழிமுறையின் மூலம் பிரதானமாக ஆளுகை செய்கின்ற முக்கிய விழுமியங்கள் மற்றும் நம்பிக்கைகள் மூலம் நடாத்திச் செல்லப்படும் அதன் கலாசாரம், கம்பனிக்கு கைத்தொழில் துறையில் ஒரு போட்டி அனுகூலத்தினை உருவாக்கியிருக்கிறது என **வரையறுக்கப்பட்ட ABC கம்பனியின்** முகாமைத்துவம் நம்புகிறது.

***நீங்கள் செய்ய வேண்டியவை :***

(a) **Charles Handy** இன் மாதிரிக்கிணங்க, **வரையறுக்கப்பட்ட ABC கம்பனியின்** நிறுவனக் கலாசாரத்தை (Organisational culture) **பகுப்பாய்வு செய்க**. (10 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட ABC கம்பனியின்** வியாபாரத் தந்திரோபாயமானது எவ்வாறு அதன் கலாசாரத்தால் செல்வாக்குச் செலுத்தப்படுகிறதென்பதை **ஆராய்க.** (08 புள்ளிகள்)

(c) ஒரு முகாமைத்துவ காரணியாக ஊக்குவிப்பை **(**Motivation) எவ்வாறு **வரையறுக்கப்பட்ட ABC கம்பனி** பயன்படுத்த முடியுமென்பதை **மதிப்பீடுக.** (07 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா இல. 09

வெளியீடு மற்றும் ஊடக (Publishing and Media) வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள பெரிய கம்பனியான **வரையறுக்கப்பட்ட பியர்சன் பொதுக் கம்பனியின் (Pearson PLC)** முகாமைத்துவப் பணிப்பாளரான **திரு. பீட்டர்** என்பவரின் கருத்துக்கிணங்க, புத்தகங்கள் அச்சிடப்பட்ட பதிப்பு என்றாவது ஒரு நாள் காலாவதியாகியிருக்க வேண்டுமென்பதால் அதனை இணையத்திலிருந்து ஒரு கோப்பு வடிவில் பதிவிறக்கம் செய்துகொள்ளல் வேண்டும். உலகில் வேகமாக மாற்றமடைகின்ற தொழில்நுட்பம் மற்றும் எப்பொழுதும் மாற்றமடைந்து செல்கின்ற நுகர்வோரின் தேவைகள் ஆகியவற்றுக்கு நிகரான (aligned) வகையில் **வரையறுக்கப்பட்ட பியர்சன் பொதுக் கம்பனிக்கு** குறிப்பிடத்தக்கதொரு மாற்றத்திற்கு உள்ளாக வேண்டியிருந்தது. **வரையறுக்கப்பட்ட பியர்சன் பொதுக் கம்பனியைப்** போன்ற பெரிய கம்பனிகள் மட்டுமன்றி சிறியளவிலான வியாபாரங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் அத்துடன் அரசாங்கங்களும்கூட குறிப்பிடத்தக்களவில் தமது செயற்பாடுகளை மேற்கொள்ளும் வழிவகைகளை மாற்றியமைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றன. **வரையறுக்கப்பட்ட பியர்சன் பொதுக் கம்பனியின்** நிலைமாற்றத்தில் (transferring) **திரு. பீட்டர்கூட** அதே வகையான கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவரைப் போன்றும் எண்ணிலடங்காத சவால்களுக்கு முகங்கொடுத்திருந்தார். அதே நேரம், மாற்றமானது எப்பொழுதும் ஒரு முகாமையாளரின் வேலையினது பகுதியொன்றாக இருந்ததுடன், அண்மைய ஆண்டுகளில் அது மேலும் அதிகரித்திருந்தது.

***நீங்கள் செய்யவேண்டியவை:***

(a) **வரையறுக்கப்பட்ட பியர்சன் பொதுக் கம்பனியில்** மாற்றங்களை முன்னெடுக்கும்போது கவனத்திற் கொள்வதற்குக் கிடைக்கும்படியாகவுள்ள மாற்றத்தின் வகைகளை **விபரிக்குக.** (07 புள்ளிகள்)

(b) மாற்றத்திற்கான தடையினை **திரு. பீற்றர்** எவ்வாறு வென்றெடுக்க முடியுமென்பதை **ஆராய்க.** (08 புள்ளிகள்)

(c) **வரையறுக்கப்பட்ட பியர்சன் பொதுக் கம்பனியின்** முக்கிய நாட்டதாரர்களை (stakeholders) **இனங்காண்க. வரையறுக்கப்பட்ட பியர்சன் பொதுக் கம்பனியின்** மீது அவர்களது செல்வாக்கினை **ஆராய்க.** (10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

**வினா இல. 10**

பல கைத்தொழில்களிலுள்ள இன்றைய முகாமையாளர்கள் புதிய உலகளாவிய போட்டி யாளர்களின் (global rivals) போட்டி அனுகூலங்களுக்கு நிகராவதற்கு கடுமையாக உழைக்கின்றனர். அவர்கள் குறைந்த கூலிக் கிரயங்களைத் தேடி, அளவீட்டின் உலகளாவிய பொருளாதாரங்களைக் (global economies of scale) கைப்பற்றுவதற்காக உற்பத்தி வரிசையை (production lines) நியாயப்படுத்தி, தர வட்டங்களை நிறுவனப்படுத்தி, வேளை உற்பத்திகளைச் (Just in- time)செய்வ துடன் யப்பானிய மனிதவள நடைமுறைகளைப் பின்பற்றி தயாரிப்புகளைக் கடல்கடந்து நகர்த்துகிறார்கள். போட்டித் தன்மையானது இன்னமும் அடைய முடியாததாக காணப்படும்போது அவர்கள், முதலில் போட்டிச் சமநிலையைக் குழப்புகின்ற கம்பனிகளுடன் தந்திரோபாய உடன்பாடுகளை (strategic alliances) அடிக்கடி உருவாக்கிக் கொள்வார்கள். அதிகளவிலான கம்பனிகள் தமது உலகளாவிய போட்டியாளர்கள் ஏற்கனவே அனுபவிக்கிற கிரயம் மற்றும் தர அனுகூலங்களை (Cost and quality advantages) மீளுற்பத்தி செய்வதற்கு பாரிய சக்தியைச் சாதாரணமாகச் செலவிடுகின்றன. மேலும், நிறுவனத்தின் சமூகப் பொறுப்புடன் தொடர்புடைய செயற்பாடுகளில் (Corporate Social Responsibility related activities) அதிகமாகச் செலவிடுதல் இன்றைய வியாபாரங்களுக்கான ஒரு போக்காக தற்போது மாறியுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) நிறுவனமொன்றுக்கான போட்டி அனுகூலத்தை அபிவிருத்தி செய்வதில் தந்திரோபாயத்தின் வகிபாகத்தை **ஆராய்க.** (08 புள்ளிகள்)

(b) நிறுவனமொன்றினால் பயன்படுத்தக்கூடிய பல்வேறு வகையான நிறுவனத் தந்திரோபாயங் களையும் அத்தகைய தந்திரோபாயங்கள் எந்த நிபந்தனையின் கீழ் மிகவும் பொருத்த மாகப் பயன்படுத்தப்பட வேண்டுமென்பதையும் **ஆராய்க.** (09 புள்ளிகள்)

(c) இன்றைய வியாபார உலகில் நிறுவனத்தின் சமூகப் பொறுப்பினது (Corporate Social Responsibility) முக்கியத்துவத்தை **ஆராய்க.** (08 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிந்தது*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |